June 2016

No. of Printed Pages : 7

**6001**

பதிவு எண் | | | | | | |

# பகுதி I – தமிழ் – முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language – Part I – TAMIL – Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரி பார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **VI**-க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. 4x2=8

1. நாடோறும் எதனைப் பாடுதல் வேண்டும் ?

2. திருவள்ளுவர் வினையை முடிக்கும் வழிகளாகக் கூறுவன யாவை ?

3. தேம்பாவணி - பொருள் கூறுக.

4. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை ?

[ திருப்புக

5. துன்பம் எவ்வாறு சிதறிப்போகும் என்று கவிஞர் சுரதா கூறுகிறார் ?

6. தேவார மூவர் யாவர் ?

II. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

7. இறை வாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளைக் கூறுக.

8. வினைமேற் சென்ற தலைவனிடம் தூது வந்த பாணன் தெரிவித்த செய்தி யாது ?

9. அறிவின் இலக்கணத்தை எழுதுக.

10. இலங்கையர்கோண் வந்ததும் ஆங்கு நிகழ்ந்தனவும் யாவை ?

11. கோலியாத்து, தாவீதனைக் கண்டு வெகுண்டு உரைத்தவை யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

12. தென்கரை நாட்டின் வளம் குறித்து 'முக்கூடற்பள்ளு' உரைப்பனவற்றை எழுதுக.

13. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை ?

14. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து எழுதுக.

15. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?

16. ''நாயினேன் மறந்து என்னினைக்கேனே'' என்று சுந்தரர் உருகுமாற்றினை விளக்குக.

**IV.** பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில் விடை எழுதுக. **1x8=8**

**17.** 'பொறையுடைமை' என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**18.** மருண்மாலைப்போதில் கண்ணகி இணைந்து ஏங்கி உரைத்தனவும் கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் விளக்கி எழுதுக.

**19.** மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

**V.** பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4x1=4**

**20.** ''யாருமில்லை தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ''

(அ) இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது ?

(ஆ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

(இ) இது யார், யாரிடம் கூறிய கூற்று ?

(ஈ) இதில் 'கள்வன்' எனக் குறிப்பிடப்பட்டவன் யார் ?

அல்லது

**21.** ''வாய்த்தீரே மானத்தை உயிரைக் காக்க

மறப்பரிது நும்நன்றி''என்றாள்.

(அ) யாருடைய உரைமொழியாக இக்கூற்று அமைந்துள்ளது ?

(ஆ) இதனை யாரிடம் கூறினார் ?

(இ) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் யாது ?

(ஈ) இப்பாடல் அடிகள் இடம் பெற்ற நூலின் ஆசிரியர் யார் ?

**VI. 22.** ''வெல்லை வேல்செய்''... எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பா வகையையும் எழுதுக. **4+2=6**

**23.** 'தினைத்துணை...' எனத் தொடங்கும் குறளையும், 'நோய்' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. **2+2=4**

VII. 24. **எவையேனும் இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2x2=4

(அ) செய்த (ஆ) அளிக்குவென்

(இ) ஒழிந்து (ஈ) கேட்டாள்

(உ) புனைந்தோம் (ஊ) விடுவார்

25. பின்வருவனவற்றுள் **ஏதேனும் மூன்றனுக்கு** மட்டும் இலக்கணக் குறிப்பு எழுதுக. 3x2=6

(அ) திருந்துமொழி (ஆ) செலீஇய

(இ) எய்துப (ஈ) மாமதி

(உ) தலைகுனிந்து (ஊ) காணீர்

26. **எவையேனும் இரண்டு** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) கடுந்திறல் (ஆ) எல்லாமுடையார்

(இ) பத்தினிப் பெண்டிர் (ஈ) விளக்கேற்றி

(உ) வறுமையுற்று (ஊ) பூங்கொடி

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

முல்லைத்திணை

**அல்லது**

பொருண்மொழிக் காஞ்சித்துறை

28. ''உதவி வரைத்தன் றுதவி உதவி 1x4=4

செயப்பட்டார் சால்பின் வரைத்து''

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

'தற்குறிப்பேற்ற அணி' அல்லது ''எடுத்துக்காட்டு உவமை அணி'' சான்று தந்து விளக்குக.

VIII. பொருத்துக. 4x1=4

| திணை | | நிலம் |
|---|---|---|
| 29. குறிஞ்சி | - | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| 30. முல்லை | - | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| 31. மருதம் | - | சுரமும் சுரம் சார்ந்த இடமும் |
| 32. நெய்தல் | - | மலையும் மலைசார்ந்த இடமும் |
| | - | காடும் காடு சார்ந்த இடமும் |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16x1=16

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் :
(அ) நக்கீரர்
(ஆ) ஒட்டக்கூத்தர்
(இ) இளங்கோவடிகள்

34. புறநானூற்றின் திணைகள் :
(அ) ஐந்து (ஆ) பதினொன்று (இ) பத்து

35. அகநானூறு மணிமிடை பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை :
(அ) 100 (ஆ) 120 (இ) 180

36. நற்றிணைப் பாக்களின் அடிவரையறை :
(அ) 4 - 8 (ஆ) 9 - 12 (இ) 13 - 31

37. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது :
(அ) பழமொழி (ஆ) திருவள்ளுவ மாலை (இ) நாலடியார்

38. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் சிறப்புப் பெயர்களில் ஒன்று :
(அ) கண்ணகி காதை
(ஆ) சிறப்பதிகாரம்
(இ) உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்

[ திருப்புக

39. சுந்தரன் என்னும் பெயரால் இராமாயணத்தில் வழங்கப் பெறுபவர் :
(அ) அனுமன் (ஆ) இராவணன் (இ) இலக்குவன்

40. 'கொன்ஸ்டான்' என்னும் சொல்லுக்குப் பொருள் :
(அ) கொன்றவன்
(ஆ) அஞ்சாதவன்
(இ) வேற்று நாட்டவன்

41. பால்வீதி என்னும் நூலை எழுதியவர் :
(அ) கவிக்கோ அப்துல்ரகுமான்
(ஆ) ஆலந்தூர் கோ. மோகனரங்கன்
(இ) உவமைக் கவிஞர் சுரதா

42. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் :
(அ) மதுரைக் கலம்பகம்
(ஆ) நந்திக் கலம்பகம்
(இ) காசிக் கலம்பகம்

43. செந்தமிழைச் செழுந்தமிழாகக் காண விரும்பியவர் :
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) கம்பதாசன்

44. தமிழையும் தெய்வத்தையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர் :
(அ) குமரகுருபரர்
(ஆ) சுந்தரர்
(இ) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

45. 'காடு' என்னும் தலைப்பில் அமைந்த கவிதை இடம் பெற்ற நூல் :
(அ) நேயர் விருப்பம் (ஆ) துறைமுகம் (இ) எழிலோவியம்

46. நீலகேசி பாடிய அருகனின் திருப்பெயர்கள் :
(அ) 108 (ஆ) 1008 (இ) 508

**47.** 'முதுமொழி மாலை' என்னும் நூலின் ஆசிரியர் :

(அ) குலசேகரர்

(ஆ) உமறுப்புலவர்

(இ) சீத்தலைச் சாத்தனார்

**48.** "இரட்டைக் கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை"... என்று பாடியவர்

(அ) சுரதா

(ஆ) வாணிதாசன்

(இ) ஆலந்தூர் மோகனரங்கன்

**X.** **கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக.** **2x2=4**

**49.** கொன்றன்ன _________ செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக்_________ .

**50.** எண்ணிய எண்ணியாங் கெய்துப _________
_________ ஆகப் பெறின்.

-oOo-